**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 131/2023 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. மதன்குமார் | | |
| க/பெ. | : திரு. நாராயணன் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 32 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 34 AZ 4797 வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு பற்றி ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். TN 34 AZ 4797 வாகனம் தான் விபத்தில் சம்பந்தப்பட்டது என்று எங்களது நிறுவனத்தின் புலன்விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின்படி தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம். மேற்படி வாகனம் விபத்திற்குள்ளானது

என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணத்தின்படி TN 34 AZ 4797 வாகனம்தான் மோ.வா.ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனம் தான் விபத்திற்குள்ளானது என்பதால் எங்களது நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டது என்றால் சரியல்ல.